7th March 1966]

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : செங்கல் மாதிரி உபயோகப் படுத்தப்படும். பிரைவேட் செக்டார், பப்ளிக் செக்டார் என்று இல்லாமல் எல்லோருக்கும் இது பயன்படும். இதனுடைய புரொடக்ஷன் கெப்பாசிடி 91 ஆயிரம் க்யூபிக் மீட்டர்ஸ்.

'சிமெண்ட்' ஆலை

*191 **கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்டந்தோறும் சிமெண்ட் ஆலை துவக்கும் உத்தேச முண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : No, Sir.

சித்த வைத்தியர்கள்

*192 **கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நான்கு ஆண்டுகள் பயிற்சி பெற்ற பாரம்பரை சித்த வைத்தியர்களை வாய்மொழித் தேர்வு வைத்துப் பதிவு செய்யப்படுகிறதா ?

(இ) ஆமெனில், அந்தத் தேர்வுகள் எந்தெந்த ஊர்களில் நடத்தப்படுகின்றன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) (1) கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்கு கோயம்புத்தூரிலும், (2) சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர் ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்குச் சென்னையிலும், (3) கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை,-இராமநாதபுரம் ஆகிய இடங்களிலிருந்து வருபவர்களுக்குப் பாளையங்கோட்டையிலும் ஆக மூன்று இடங்களில் வாய்மொழித் தேர்வுகள் , (oral tests) நடத்தப்படுகின்றன.

திரு. எம். எஸ். செல்வராஜன் : இதுவரை எத்தனை சித்த வைத்தியர்களுக்கு சர்ட்டிபிகேட் வழங்கப்பட்டிருக்கிறது ? அவர்கள் பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்ஸரிகளிலே வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அதற்குத் தனிக்கேள்வி வேண்டும். அவர்களுடைய அப்ளிகேஷன்களையெல்லாம் ஆராய்ந்து, அவர்களுடைய பெயர்களைப் பதிவு செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கப்பட வேண்டியிருக்கின்றன.

திரு. மு. கருணாநிதி : அந்தத் தேர்வு நடத்துகிற அதிகாரிகள் எத்தகைய திறமை வாய்ந்தவர்களாக எடுக்கப்படுகிறார்கள் ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Administrative Officer and ex-officio Deputy Secretary to Government, Education & Public Health Department, Principal, College